
அஷ்டலக்ஷ்மி

# சிறுவர் கதை மலர்

1



கல்வி உலகு

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | நாயும் ஓநாயும் | 3 |
| 2. | கவனமில்லாச் சிறுமி | 5 |
| 3. | முயல்களும் தவளைகளும் | 7 |
| 4. | ஓநாயும் ஆட்டுக்குட்டியும் | 9 |
| 5. | நரியும் ஆடும் | 11 |
| 6. | சிங்கமும் குமரியும் | 14 |
| 7. | காற்றும் சூரியனும் | 17 |
| 8. | கர்வங்கொண்ட மான் | 19 |
| 9. | புத்தியுள்ள நீதிபதி | 21 |
| 10. | கரடியும் இரண்டு நண்பர்களும் | 24 |





வாரத்தின் ஏழு நாட்களுக்கு உகந்ததாக இந்த கதைமலர் புத்தகம் பிரித்து அச்சிடப்பட்டுள்ளது. மாணவ, மாணவியர்கள் இந்த கதை மலரைப் பயன் படுத்த ஆசிரியப்பெருமக்கள் பெரும் உறுதுணையாக இருகின்றார்கள். அவர்களுக்கு நாங்கள் எப்போதும் எங்கள் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

" நல்ல புத்தகம் நல்ல நண்பனை விட மேலானது. "

- பதிப்பாளர்


Kalviulagu
TAMIL EDUCATION WEB
www.kalviulagu.com

# 1. நாயும் ஓநாயும்



ஒரு நாள் மாலை ஒரு நாயும் ஓர் ஓநாயும் சந்தித்தன. பல நாட்களாகப் போதுமான உணவு இல்லாததால், ஓநாய் மிகவும் மெலிந்து சோர்வுடன் இருந்தது.

நாய் ஓநாயைப் பார்த்து "நண்பரே! ஏன் மிகவும் வருத்தத்துடன் இருக்கின்றீர்கள்? தங்களுக்கு என்ன குறை?" என்று கேட்டது. "நான் உணவு உண்டு இரண்டு நாட்களுக்கு மேல் ஆகின்றது. பசியால் மிகவும் வாடுகிறேன்."என்று ஓநாய் பதில் கூறியது.


இதைக் கேட்டு வருத்தமுற்ற நாய் "நண்பரே! கலங்கவேண்டாம். நான் தங்களுக்கு உதவுகின்றேன். என்னுடன் என்னை வளர்ப்பவர் வீட்டிற்கு வாருங்கள். தங்களுக்கு அங்கு நிறைய உணவு கிடைக்கும். தாங்கள் பசியால் வாட வேண்டாம்" என்றது.

www.kalviulagu.com
கல்வி உலகு

சிறிது மகிழ்ச்சியுடன் ஓநாய் நாயுடன் கூடப் புறப்பட்டுச் சென்றது. இரண்டும் பேசிக்கொண்டே சென்றன. சிறிது தூரம் சென்றதும் தற்செயலாய் ஓநாய், நாயின் கழுத்திலுள்ள தோல்பட்டையைப் பார்த்தது. உடனே நாயிடம் அப்பட்டை எதற்காக என்று கேட்டது.

“இது என்னை வளர்ப்பவர் எனக்கு போட்டுள்ள பட்டை. இதிலுள்ள கொக்கியால் என்னை ஒரு சங்கிலியுடன் பிணைத்து பகலில் கட்டி வைப்பார். இரவு நேரத்தில் தான் சங்கிலியை அவிழ்த்து விடுவார்” என்று நாய் கூறியது, “வாருங்கள், போகலாம்” என்று ஓநாயை அழைத்தது.

இது கேட்ட ஓநாய், நாயைப்பார்த்து, “அன்புள்ள நண்பரே! தங்களது உதவிக்கு எனது நன்றி. ஆனால் நான் பசியால் வாடினாலும் உணவுக்காக அடிமையாக வாழ விரும்பவில்லை” என்று கூறியது. பிறகு நாயிடம் விடை பெற்று வந்த வழியே திரும்பிச் சென்றது.




www.kalviulagu.com



கல்வி உலகு

# 2. கவனமில்லாச் சிறுமி



ஒரு கிராமத்தில் ஒரு கிழவி இருந்தாள் அவளிடம் இரண்டு பசு மாடுகள் இருந்தன. அவை நிறையப் பால் கொடுத்தன. அப்பாலை விற்றுக் கிடைத்த பணத்தில் வாழ்க்கை நடத்தி வந்தாள்.

அவளுக்கு ஒரே ஒரு மகள் இருந்தாள். அவளைக் கிழவி அன்புடன் வளர்த்து வந்தாள்.

தினமும் அச்சிறுமி பசுவின் பாலை பெரிய பானையில் எடுத்துச் சென்று அருகிலுள்ள நகரத்தில் விற்று வந்தாள். ஒரு நாள் அச்சிறுமி வழக்கம் போல் தலையில் பால் பானையுடன் நகரம் நோக்கிச் சென்று கொண்டிருந்தாள். திடீரென்று அவளுக்கு ஒரு எண்ணம் உதித்தது.


"இப்பாலை அதிக விலைக்கு விற்றால் நிறையப் பணம் கிடைக்கும். அதைக் கொண்டு ஒரு சிறந்த பெட்டைக் கோழி வாங்குவேன்.

www.kalviulagu.com
கல்வி உலகு


அது தினமும் நிறைய முட்டைகள் இடும். அம் முட்டைகளை விற்று நிறையப் பணம் சம்பாதித்து பணக்காரி ஆவேன். பல நூதன ஆடைகள் வாங்கி அணிவேன் அதைக் கண்டு எல்லோரும் என்னுடன் பேச வருவார்கள். நான் அவர்களுக்கு பதில் சொல்லாமல் தலையை மட்டும் அசைப்பேன் என்று நினைத்தாள். தலையில் உள்ள பால் குடத்தை மறந்து தலையை அலட்சியமாக ஆட்டினாள். பால் குடம் கீழே தரையில் விழுந்து நொருங்கிற்று. பால் முழுவதும் சிந்தி வீணாகியது. இது கண்ட சிறுமி தனது முட்டாள் எண்ணத்தால் ஏற்பட்ட கதியை நினைத்து வருந்தினாள். அழுதுகொண்டே வீடு திரும்பினாள்.

நடந்த விபரம் கேட்ட கிழவி வருத்தத்துடன் தன் மகளுக்கு ஆறுதல் கூறித் தேற்றினாள். எப்போதும் தனது வேலையில் கவனமாக இருக்கச் சொன்னாள். அச் சிறுமியும் அன்று முதல் அவசியமில்லாத எண்ணங்களை விட்டு தன் வேலையில் கவனத்துடன் நடந்து கொண்டாள்.

www.kalviulagu.com



# 3. முயல்களும் தவளைகளும்



ஒரு காட்டில் ஒரு புல் வெளியில் நிறைய முயல்கள் சேர்ந்து வசித்து வந்தன. அக்காட்டில் ஓநாய்கள், புலிகள், சிங்கங்கள் முதலிய விலங்குகளும் நிறைய இருந்தன. அவ்விலங்குகள், முயல்களை அடிக்கடி கொன்று உணவாகக் கொண்டன. அதனால் அம்முயல்கள் நிம்மதியின்றி எப்பொழுதும் பயத்துடன் அங்கு வாழ்ந்து வந்தன.

ஒரு நாள் எல்லா முயல்களும் ஒன்று கூடிப் பேசின. வயது முதிர்ந்த முயல் ஒன்று மற்ற முயல்களைப் பார்த்து "நாம் எத்தனை காலம்," இவ்வாறு நிம்மதியின்றி பயத்துடன் வாழ முடியும்? நம்மால் சிறிது நேரம் கூட ஆபத்து இல்லாமல் வெளியே செல்ல முடியவில்லை. நாமும் சக்தியற்றவர்களாய் இருக்கிறோம், நமது இத்துன்பத்தை எவ்வாறு நிவர்த்திப்பது?" என்று கூறியது. இது கேட்ட மற்றொரு பெரிய முயல் "நாம் இவ்வாறு பயந்து வாழ்வதை விட இறப்பது மேல் என்றது.

www.kalviulagu.com



கல்வி உலகு


நாம் எல்லோரும் சேர்ந்து அருகிலுள்ள பெரிய குட்டைக்குச் சென்று, விழுந்து மூழ்கி, மடிவது மேல்". என்றது. இதை எல்லா முயல்களும் ஆமோதித்தன.

மறுநாட் காலை எல்லா முயல்களும் ஒன்று கூடி அக் குட்டையை நோக்கி புறப்பட்டுச் சென்றன. அக்குட்டையில் நிறையத் தண்ணீர் இருந்தது. அதனால் அதில் நிறைய தவளைகள் இருந்தன. அவைகள் அப்பொழுது கரையில் குதித்து விளையாடிக் கொண்டிருந்தன. திடீரெண்டு அங்கு வரும் முயல் கூட்டத்தைக் கண்டு பயந்து நடுங்கி அவை எல்லாம் நீரில் குதித்து மறைந்தன.


இதைப் பார்த்த பெரிய முயல் மற்ற முயல்களை நிறுத்தி, அவைகளிடம், "நாம் சிங்கம், புலி முதலிய மிருகங்களைக் கண்டு அஞ்சுகிறோம். நம்மைக் கண்டு தவளைகள் அஞ்சி ஓடி ஒளிகின்றன. அதனால் நாம் உயிரை விடுவது விவேகமான செயல் அல்ல. எல்லோரும் நமது இருப்பிடம் திரும்பிச் செல்வோம்?" என்றது.

உடனே, எல்லா முயல்களும் தமது இருப்பிடம் திரும்பின. அன்று முதல் அம்முயல்களும் தமது பயத்தை விட்டு ஒற்றுமையுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தன.

www.kalviulagu.com



# 4. ஓநாயும் ஆட்டுக்குட்டியும்



ஒரு காட்டின் அருகில் குடியானவன். ஒருவன் இருந்தான். அவனிடம் நிறைய ஆடுகள் இருந்தன. அவன் தினமும் தனது ஆடுகளை அருகில் உள்ள காட்டிற்கு ஓட்டிச் சென்று மேய்த்து வந்தான்.

ஒரு நாள் காட்டில் மேய்ந்து கொண்டிருந்த அவனது ஆடுகளில், குட்டி ஒன்று மந்தையை விட்டுப் பிரிந்து வழி தவறியது. வெகு நேரம் அலைந்த பிறகு ஓர் ஓடையின் அருகே வந்தது.

அக்காட்டில் பெரிய ஓநாய் ஒன்று இருந்தது. அது ஆட்டுக் குட்டியைக் கொன்று தின்ன வெகுநாட்களாய் ஆவலாக இருந்தது. தற்செயலாக அன்று அச்சமயம் ஓநாயும் அங்கு நீர் குடிக்க வந்தது. ஆட்டுக் குட்டியை அங்கு கண்டது. அதை அடித்து உண்ண நினைத்தது. ஆட்டுக் குட்டியைப் பார்த்து, "நீ ஏன் ஓடையின் நீரைக் கலக்குகிறாய்? அதனால் நான் நீர் குடிக்க முடியவில்லை". என்று கோபத்துடன் கூறியது. அது கேட்ட ஆட்டுக்குட்டி நடுங்கிக் கொண்டே, "ஐயா! ஓடையின் நீர் தங்களிடமிருந்து தான் எனக்கு வருகிறது.

www.kalviulagu.com
கல்வி உலகு


நான் எவ்வாறு தாங்கள் குடிக்கும் நீரைக் கலக்க முடியும் என்றது. உடனே ஓநாய், "நீ ஒரு குறும்புத் தனமுள்ளவன். சென்ற வருடம் என்னைப் பலவாறு இழிவாகப் பேசினாய்.

அதற்கு நான் உன்னைப் பழி வாங்கப்போகிறேன்" என்றது. அதற்கு ஆட்டுக்குட்டி "நான் பிறந்து மூன்று மாதங்களே ஆகின்றன. எவ்வாறு நான் தங்களை சென்ற வருடம் குறைகூற முடியும்?" என்றது. உடனே ஓநாய், "நீ இல்லாவிடில் உன் தாயோ, தந்தையோ இழிவாகப் பேசியிருக்கலாம். அதற்காக நான் உன்னைக் கொன்று தின்னப் போகிறேன்" என்று கூறி ஆட்டுக் குட்டியின் மேல் பாய முயற்சித்தது.

அச்சமயம் தனது ஆட்டுக்குட்டியைத் தேடி அலைந்த குடியானவன் ஓடையின் கரையில் ஆட்டுக்குட்டியையும் ஓநாயையும் கண்டான். தனது கையிலிருந்த தடியால் ஓநாயை அடித்துக் கொன்றான். ஆட்டுக் குட்டியை எடுத்துக் கொண்டு வீடு திரும்பினான்.



# 5. நரியும் ஆடும்



வயதான நரி ஒன்று ஒரு நாள் இரை தேடி வெகு நேரம் காட்டில் அலைந்தது. இரை எதுவும் கிடைக்காததால் பசியால் மிகச் சோர்வுற்று களைப்புடன் தள்ளாடி நடந்து சென்றது, வழியில் பெரிய பாழுங்கிணறு ஒன்று இருந்தது. அதற்குக் கைபிடிச் சுவர் இல்லாததால் தள்ளாடி நடந்து சென்ற நரி தவறி கிணற்றினுள் விழுந்து விட்டது.


கிணறு வெகு ஆழமாக இருந்ததால் பலவாறு முயன்றும் நரியால் தப்பி வெளியே வர முடியவில்லை, அதனால் அயர்வுற்று வருத்தத்துடன் நின்றது.

www.kalviulagu.com கல்வி உலகு

வெகு நேரத்திற்குப் பிறகு தற்செயலாய் அவ்வழியே ஒரு பெரிய ஆடு வந்தது. அது கிணற்றினுள் எட்டிப்பார்த்தது. நரியைக் கண்டதும், ஆச்சரியமுற்று, "நரியாரே! கிணற்றினுள் என்ன செய்து கொண்டு இருக்கிறீர்கள்?" என்று கேட்டது. அதற்கு நரி, "இங்குள்ள புல் மிக இனிமையாக இருக்கிறது. அதைத் தின்னவே நான் இங்கு இறங்கினேன் என்றது .

இது கேட்ட ஆடு ஆச்சரியத்துடன் "நீங்கள் புல் தின்பதுண்டா?" என்று கேட்டது. அதற்கு நரி "புல் பொதுவாக எனது உணவல்ல. ஆனால் இங்குள்ள புல் மிக இனிமையாக இருப்பதால் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது" என்றது.

www.kalviulagu.com




அதற்கு ஆடு ஆசையுடன் "நானும் அங்கு வரலாமா? நாம் இருவரும் சேர்ந்து புல் தின்னலாமா?" என்று கேட்டது. நரி, "இங்கு நிறையப் புல் இருப்பதால் நாம் இருவரும் புசிக்கலாம் தாங்கள் இங்கே இறங்கி வாருங்கள்" என்றது.

ஆடு சிறிதும் யோசிக்காமல் கிணற்றினுள் குதித்தது. சமயம் எதிர்பார்த்திருந்த நரி ஆட்டின் தலையின் மேல் காலை வைத்துத் தாவி வெளியே குதித்துத் தப்பி ஓடியது.

ஆடு, நரியின் செயலைக் கண்டு திகைத்து அச்சமுற்றது. பல முறை முயன்றும் அதனால் வெளியே வர முடியவில்லை. தனது அறியாமையை நினைத்து வருந்தியது.

பொழுது கடந்து வெகுநேரம் ஆகியும் ஆட்டைக் காணாத குடியானவன் அதைத் தேடி அலைந்தான். தற்செயலாய் அக் கிணற்றினருகில் வந்து எட்டிப் பார்த்தான். தனது ஆட்டைக் கண்டான். உடனே கிணற்றில் இறங்கி ஆட்டை வெளியேற்றினான். தப்பிய ஆடு குடியானவனுடன் வீடு திரும்பியது.




www.kalviulagu.com



கல்வி உலகு

# 6. சிங்கமும் குமரியும்




ஒரு காட்டின் அருகே வேடன் ஒருவன் தன் குடும்பத்துடன் வசித்து வந்தான். அவனுக்கு மனைவியும் ஒரு மகளும் இருந்தனர். அவன் தினந்தோறும் அக்காட்டில் வேட்டையாடிக் காலம் கழித்து வந்தான்.

ஒரு நாள் மாலை வேடனும் அவனது மனைவியும் வெளியில் சென்றிருந்தனர். வேடனது மகள் தனியே குடிசையில் இருந்தாள். அருகில் உள்ள குட்டைக்குச் சென்று தண்ணீர் எடுத்து வந்தாள். தலையில் தண்ணீர் குடத்துடன் தனது குடிசை நோக்கி வந்து கொண்டிருந்தாள். அச்சமயம் சிங்கம் ஒன்று அவ்வழியே வந்தது. அது அப்பெண்ணைக் கண்டது. அவளது அழகைக் கண்டு அவளை மணக்க விரும்பியது.

சிங்கம் பெண்ணை நெருங்கி, "பெண்ணே உன்னை நான் மணம் செய்து கொள்ள விரும்புகிறேன். நீ என்ன சொல்கிறாய்?" என்றது.


இது கேட்ட அப்பெண் சிறிது அச்சமுற்றாள். ஆனால் சமாளித்துக் கொண்டு சிங்கத்திடம் "உன்னை மணக்கச் சம்மதிக்கிறேன் தண்ணீர் குடத்தை குடிசையில் வைத்துவிட்டு வருகிறேன் என்று கூறி குடிசையினுள் சென்றாள்.

சிங்கமும் ஆவலுடன் குடிசையின் வாயிலில் காத்திருந்தது. அப்பெண் குடிசையில் தண்ணீர் குடத்தை வைத்துவிட்டு வெளியே வந்தாள். சிங்கத்திடம், "நான் உன்னை மணம் செய்து கொள்ளத் தயார். ஆனால் உனது பற்களையும் நகங்களையும் கண்டால் மிக்க பயமாக இருக்கிறது" என்றாள்.

www.kalviulagu.com




அதற்குச் சிங்கம் "அப்படியானால் நீ எனது பற்களையும் நகங்களையும் பிடுங்கி எடுத்துவிடு" என்றது. உடனே அப்பெண் உள்ளே சென்று ஒரு கூரிய கருவி எடுத்து வந்தாள். சிங்கத்தின் நகங்களையும் பற்களையும் அக்கருவியால் சுலபமாக எடுத்து விட்டாள். திரும்ப உள்ளே சென்று அக்கருவியை வைத்து விட்டு ஒரு பெரிய தடியுடன் வெளியே வந்தாள். இப்பொழுது சிங்கத்திடம் அவளுக்குச் சிறிதும் அச்சமில்லை. அத்தடியால் சிங்கத்தை அடிக்க ஆரம்பித்தாள். தன் சக்தியை இழந்த சிங்கம் ஒன்றும் செய்ய முடியால் பயந்து அங்கிருந்து ஓடி காட்டிற்குள் மறைந்தது. குமரியும் தனது சாமர்த்தியத்தால் சிங்கத்திடமிருந்து தப்பினாள்.



www.kalviulagu.com

# 7. காற்றும் சூரியனும்



சூரியன் நமக்கு வெளிச்சமும் வெப்பமும் கொடுக்கிறது. தினமும் காலையில் கிழக்கே உதித்து மாலையில் மேற்கே மறைகிறது. நமது வாழ்க்கைக்கு சூரியனது வெப்பம் மிக அவசியமானது.

ஒரு நாள் சூரியனும் காற்றும் பேசிக் கொண்டன. காற்று சூரியனிடம் "நான் உன்னைவிட அதிக பலம் உள்ளவன்" என்று இறுமாப்புடன் கூறியது.

அது கேட்ட சூரியன் நகைத்துக் கொண்டே "நீ அதிக பலமுள்ளவன்தான். அதில் சந்தேகமில்லை. ஆனால் நான் உன்னைவிட அதிக பலம் உள்ளவன்" என்று பதில் கூறியது.

"இல்லவே இல்லை. நான் உன்னை விட அதிக பலம் உள்ளவன். நான் அதை நிரூபிக்கவும் தயார்" என்று கூறியது.

"எவ்வாறு நிரூபிப்பாய்?" என்று சூரியன் கேட்டது.




கல்வி உலகு

"அதோ! வெகு தூரத்தில் சாலையில் நடந்து வந்து கொண்டிருக்கும் மனிதனைப் பார். அவன் மேல் சட்டை அணிந்து இருக்கிறான். எனது பலத்தால் அவன் தனது மேல் சட்டையைக் கழற்றி எடுக்கும்படி செய்கிறேன். அப்பொழுது என் பலத்தை நீ ஒப்புக் கொள்வாயா? என்ன சொல்கிறாய்?". என்று காற்று சொல்லிற்று. சூரியனும் அதற்குச் சம்மதித்தது.


உடனே காற்று பலமாக வீசத் தொடங்கிற்று. வெகுநேரம் தனது முழு பலத்துடன் வீசிற்று. காற்றின் வேகத்தையும் குளிரையும் தாங்க முடியாமல் அம்மனிதன் தனது மேல் சட்டையை இறுகப்பிடித்துத் தனது உடம்பை மூடிக் கொண்டான்.

இது கண்ட சூரியன் காற்றினிடம், "எனது பலத்தைக் காண்பிக்கவா?" என்று வினவியது. காற்றும் சம்மதித்தது. உடனே சூரியன் முழு உக்கிரத்துடன் ஒளி வீசத் தொடங்கியது. வெப்பம் தாங்காமல் அம்மனிதன் தனது மேல்சட்டையைக் கழற்றி கையில் எடுத்துக்கொண்டான். ஒரு மரத்தின் நிழலில் அமர்ந்து இளைப்பாறினான்.

அது கண்ட காற்று தனது தோல்வியை ஒப்புக்கொண்டது. அன்று முதல் தனது இறுமாப்பையும் விட்டது.



# 8. கர்வங்கொண்ட மான்



ஒரு காட்டில் நிறைய மான்கள் வசித்து வந்தன. அவைகளுக்கு அங்கு நிறையப் புல் கிடைத்ததால், அவை வயிறார உண்டு சுகமாய் வாழ்ந்து வந்தன.


ஒரு நாள் மான் ஒன்று கூட்டத்திலிருந்து பிரிந்தது. தவறி வழி தெரியாமல் இங்கும் அங்கும் அலைந்தது. கூட்டத்துடன் சேரமுடியாமல் தவித்தது. வெகுநேரம் அலைந்த களைப்பால் அதற்கு அதிகத் தாகம் எடுத்தது. அருகில் ஒரு குட்டையைக் கண்டது. அங்கு சென்று குனிந்து நீர் குடித்தது. நீரில் அதன் உருவம் தெரிந்தது. அதைக்கண்டு அது ஆச்சரியப்பட்டுத் தனக்குள் எனது கொம்புகள் எவ்வளவு அழகாக இருக்கின்றன? அதனால் எனக்கு எவ்வளவு பெருமை? "எனது கால்கள் தான் நீண்டு மெலிந்து அழகில்லாமல் இருக்கின்றன. அவைகளால் எனக்கு எவ்வித நன்மையும் இல்லை" என்று நினைத்தது.

www.kalviulagu.com

அச்சமயம் அருகில் வேடர்கள் வரும் ஓசை கேட்டது. அவர்களைக் கண்டதும் மான் பறந்து அங்கிருந்து வெகு வேகமாக ஓடிற்று. சிறிது நேரத்தில் வேடர்களிடமிருந்து தப்பியது. வேடர்கள் வெகு தூரம் பின் தங்கினர். அதனால் அவர்களது பயம் நீங்கிய மான் ஒரு பெரிய மரத்தின் அடியில் தங்கி இளைப்பாறியது.


சிறிது நேரம் கழித்து மறுபடியும் வேடர்கள் அருகில் வரும் ஓசை கேட்டது. பயந்து நடுங்கிய மான் அங்கிருந்து ஓட நினைத்தது. ஆனால் அங்கிருந்த மரக்கிளை ஒன்றில் அதன் கொம்புகள் சிக்கிக்கொண்டன. வெகுவாக முயன்றும் அம் மானால் தன்னை விடுவித்துக் கொள்ள முடியவில்லை. அம்மரத்தடியிலேயே நின்று தவித்தது. அங்கு வந்த வேடர்கள் மானைக்கண்டு அதை அடித்துக் கொன்றார்கள்.

இறக்கும் நேரத்தில் மான் தனக்குள் “எனது கால்களை நான் வெறுத்தேன். அவை தான் வேடர்களிடம் இருந்து தப்பி ஓட உதவின. ஆனால் நான் பெருமையாக நினைத்த என் கொம்புகளால் நான் வேடர்களிடம் அகப்பட்டு இறக்க நேரிட்டது”. என நினைத்து வருந்தி, உயிர் நீத்தது.



www.kalviulagu.com

# 9. புத்தியுள்ள நீதிபதி



ஓர் ஊரில் நீதிபதி ஒருவர் இருந்தார். அவரது, அறிவுத் திறனும் புத்திக்கூர்மையும் நாலா பக்கமும் பரவியிருந்தன. அதனால் அவரை எல்லோரும் புகழ்ந்து பாராட்டி வந்தனர்.


ஒருநாள் அவரது நீதி மன்றத்திற்கு இரண்டு பெண்கள் வந்தனர். அவர்களது பெயர் சந்திரா, மீரா. சந்திராவின் கையில் ஒரு குழந்தை இருந்தது. முதலில் மீரா, நீதிபதியிடம், "ஐயா, சந்திராவின் கையில் உள்ள குழந்தை என்னுடையது. இன்று காலை அக்குழந்தையை அவள் என்னிடமிருந்து கொஞ்சி விளையாட வாங்கினாள். இப்பொழுது குழந்தையைத் திரும்ப என்னிடம் கொடுக்க மறுக்கிறாள். குழந்தை தனது என்று கூறுகிறாள். தாங்கள் தான் என் குழந்தை எனக்குக் கிடைக்க உதவ வேண்டும்" என்று கூறினாள்.

www.kalviulagu.com

இது கேட்ட நீதிபதி சந்திராவைப் பார்த்து, "மீரா கூறும் குற்றத்திற்கு உன் பதில் என்ன? ஏன் அவளது குழந்தையை அவளிடம் திரும்பத் தர மறுக்கிறாய்?" என்று கேட்டார்.

"நீதிபதியவர்களே! மீரா சொல்வது முழுவதும் பொய். இது என்னுடைய குழந்தைதான். அவளுக்கு குழந்தை இல்லாததால் என் குழந்தையை அபகரிக்க நினைக்கிறாள்" என்று சந்திரா கூறினாள்.

நீதிபதிக்கு இது ஒரு சங்கடமான நிலையை ஏற்படுத்தியது. வெகு நேரம் யோசித்தார். பிறகு சந்திராவைப் பார்த்து, "நீங்கள் இருவரும் கூறுவதில் உண்மையை என்னால் கண்டுபிடிக்கமுடியவில்லை. அதனால் குழந்தையை சமமாக இரு பாகங்களாக வெட்டுவோம். ஒன்றை நீயும் மற்றொன்றை மீராவும் எடுத்துக் கொள்ளுங்கள்" என்று கூறினார்.



இது கேட்ட சந்திரா பதில் எதுவும் கூறாமல் பேசாமல் இருந்தாள். ஆனால் மீராவோ அலறி அடித்து அழுது கொண்டே நீதிபதியிடம் "ஐயா! எனக்குக் குழந்தை வேண்டாம். அதை இரண்டு துண்டுகளாக வெட்ட வேண்டாம். குழந்தை சந்திராவிடமே இருக்கட்டும்" என்று கூறினாள்.

இது கேட்ட நீதிபதிக்கு உடனே உண்மை விளங்கிற்று. குழந்தையின் மேலுள்ள தாய்ப்பாசத்தால் மீரா குழந்தையை வெட்டச் சம்மதிக்கவில்லை. ஆனால் சந்திராவோ குழந்தை அவளுடையது இல்லாததால், வருத்தம் எதுவும் இல்லாமல் பேசாமல் இருந்தாள்.

உடனே நீதிபதி சந்திராவிடம், "நீ கூறுவது முழுவதும் பொய். குழந்தை உன்னுடையதல்ல; மீராவினுடையதுதான். அதை உடனே அவளிடம் திரும்பக்கொடு" என்று உத்தரவிட்டார். சந்திராவிற்கு தகுந்த தண்டனையும் கொடுத்தார். தனது குழந்தையைத் திரும்பப் பெற்ற மீரா மகிழ்ச்சியுடன், நீதிபதிக்கு நன்றி கூறி விடை பெற்றுச் சென்றாள்.



www.kalviulagu.com

# 10. கரடியும் இரண்டு நண்பர்களும்



பாலனும் வேலனும் நண்பர்கள். ஒரு நாள் இருவரும் காட்டுவழியாகப் போனார்கள். சற்று தூரத்தில் ஒரு கரடி வருவதைப் பார்த்தார்கள். கரடியிடமிருந்து எப்படித் தப்புவது என்று யோசித்தனர். பாலனுக்கு நன்றாக மரம் ஏறத் தெரியும். ஆகவே அவன் வேகமாக ஓடி மரத்தில் ஏறிக் கொண்டான். வேலனுக்கு மரம் ஏறத் தெரியாது. அவன் கரடியிடமிருந்து தப்பிக்க ஒரு தந்திரம் செய்தான். செத்த பிணம் போல அசைவில்லாமல் கீழே படுத்துக் கொண்டான். கரடி வந்து. தலை முதல் கால் வரை வேலனை மோந்தது. பிணம் என்று நினைத்து அவனை விட்டுவிட்டுப் போய்விட்டது.

மரத்தில் ஏறிய பாலன் கீழே இறங்கி வந்தான். "வேலா! கரடி உன்னிடம் என்ன சொல்லியது"? என்று கேட்டான். ஆபத்தை கண்டு ஓடுகிற நண்பனை நம்பாதே என்று கரடி சொல்லியது என்றான்.

கல்வி உலகு









கல்வி உலகு


# கல்வி உலகு





விலை. 100/-

**அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்**
41, கண்டி வீதி, கைதடி யாழ்ப்பாணம்.
322, செட்டியார் தெரு, கொழும்பு - 11.
தொலைபேசி: 021-2231769, 011-2334004
E-mail : austraIuxme@yahoo.com, Web : ww.astraluxumie.com